I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
M.C.O.P.NO.88/2020(c/w.MCOP No.87/2020)
Joint trial

| | | |
|---|---|---|
| Name | : | Devaraj |
| Father Name | : | Saminathan |
| Age | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.07.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 04.20 p.m**

**4 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து 2018 ல் நடந்தது. விபத்து நடந்தவுடன் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் மருத்துவமனையில் தான் என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். அதன் அடிப்படையில் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் உள்ள சங்கதிகள் உண்மை. இந்த விபத்தில் நான் என் மனைவியை அழைத்து கொண்டு ஆட்டோவில் கருகம்புத்தூரிலிருந்து பூட்டுத்தாக்கிற்கு சென்றோம். இந்த விபத்து பிள்ளையார்குப்பத்தில் நடந்தது. விபத்து எப்படி நடந்தது என்றால் கார் இடித்து நான் தனியாக போய் விழுந்து விட்டேன்.

அது சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கையில் நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நான் சென்ற ஆட்டோ வாகன எண். TN 23 AK 2077 என்ற வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது எனக்கு பின்னால் வந்த இருச்சக்கர வாகனம் TN 23 CE 8968 Hero speldour இடித்து விழுந்துவிட்டேன் என்றால் சரிதான். விபத்தில் நான் நிலைதடுமாறி விழுந்துவிட்டேன்

என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கார் இடித்து நான் கீழே விழுந்துவிட்டேன் என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் அதில் மாற்றி எழுதியிருக்கிறார்கள்.

நான் ஓட்டி சென்ற ஆட்டோவிலிருந்து வண்டி போய் கொண்டிருக்கும்போது நான் கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரிதான். நான் விழுந்ததால் ஆட்டோ நடரோட்டில் வலது பக்கம் போய் விட்டது என்றால் சரிதான். அதில் என் மனைவி அமர்ந்திருந்தார். ஆட்டோ நடுரோட்டில் தனியாக போனபோது எதிர் திசையில் ஒரு வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி honda car KA 01 ML 8275 வந்தது என்றாலும் அதில் போய் என் ஆட்டோ போய் மோதிவிட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பின் அடுக்கம்பாறை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன்.

மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 3 – X ray ரிப்போர்ட் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வண்டியை இடித்தது இருச்சக்கர வாகனம் என்றாலும் இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளரை 1வது எதிர்மனுதாரராகவும் அந்த வாகனத்தை ஓட்டி சென்ற நபரை 2வது எதிர்மனுதாரராகவும் காரின் உரிமையாளரை 3வது எதிர்மனுதாராகவும் காரின் காப்பீட்டு நிறுவனத்தை 4வது எதிர்மனுதாரராவும் சேர்க்க வேண்டும் என்றால் சரிதான். இந்த மனுவில் நான் ஓட்டி சென்ற வாகனத்தையும் காப்பீட்டு நிறுவனத்தையும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தற்போது ஆட்டோ ஓட்டி தான் தொழில் செய்கிறேன் என்றால் சரிதான். என் மனைவி ஒரு வழக்கு(MCOP

NO.87–2020) தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதில் 4 பேரில்லாமல் என் ஆட்டோவையும் ஆட்டோவின் காப்பீட்டு நிறுவனத்தையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ம.சா.ஆ.5( மோட்டார் வாகன விபத்து ஆய்வறிக்கை) ல் இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்து நான் கொடுத்த முதல் தகவல் அறிக்கை, புகார் மற்றும் இறுதி அறிக்கை ஆகியவற்றின் படி 1வது எதிர்மனுதாரருக்கு எதிராக ம.சா.ஆ. 8–குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்த வரை 1வது எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் 3வது எதிர்மனுதாரர் தரப்பு வாகனம் சரியான திசையில் சென்று கொண்டிருந்த காரணத்தினால் என்னுடைய ஆட்டோ தானாக சென்று கார் மீது மோதியதால் 4வது எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் எந்த வித இழப்பீடும் தர வேண்டியதில்லை என்றாலும் 4வது எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

என் மனைவி தாக்கல் செய்துள்ள வழக்கிலும் x ray report ம.சா.ஆ. 9 யை தான் தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். மற்ற மருத்துவ அவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். MCOP NO. 87/2020 என்ற வழக்கிலும் 1வது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க வேண்டும் என்றாலும் 4வது எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. ஆட்டோவிற்கு சேதாரம் ஏற்பட்டது. வண்டி பழுது பார்த்துவிட்டு காப்பீடு வாங்கவில்லை.

**விசாரணை முடிந்த நேரம் : 04.45 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.